விதிகளைத் தளர்த்தி உதவிகள் வழங்கல்! - – அமைச்சர் தங்கம் தென்னரசு அறிக்கை!

முதல் பக்கத் தொடர்ச்சி

76 நபர்கள் தென்காசி மாவட்டத்திலும், 49 நபர்கள் தூத்துக்குடி மாவட்டத்திலும், 18 நபர்கள் தமிழகத்தின் பிற மாவட்டங்களிலும், 9 நபர்கள் பிற மாநிலங்களிலும் குடியேற விரும்புவதாகத் தெரிவித்துள்ளனர். அவர்களின் விண்ணப்பங்களைப் பெற்று அதற்கான அனைத்து உதவிகளையும் செய்திட உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்நேர்வில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாஞ்சோலை தொழிலாளர்களின் பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக மாவட்ட ஆட்சியர் மூலம் பெறப்பட்ட அறிக்கைகள், பல்வேறு தரப்பினரின் கோரிக்கைகள் உள்ளிட்டவற்றை விரிவாகப் பரிசீலித்து, அவர்களுக்கு அரசின் சில விதிகளை தளர்வு செய்து பல்வேறு உதவிகளை வழங்கிட உத்தரவிட்டுள்ளார்கள். அதன்படி, அவர்களுக்கு பின்வரும் உதவிகளை வழங்கிட உத்தரவு வழங்கப்பட்டு, அதனடிப்படையில் நீதிமன்றத்திலும் அவை மாவட்ட ஆட்சியரால் அறிக்கையாக தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

1.கிராமப் பகுதிகளில் குடியேற விரும்பும் வீடற்ற தொழிலாளர்களுக்கு தற்போதைய அரசு விதிமுறைகளைத் தளர்வு செய்து சிறப்பினமாகக் கருதி அவர்களின் விருப்பத்தின் பேரில் இலவச வீட்டுமனைப் பட்டா மற்றும் "கலைஞர் கனவு இல்லம்" திட்டத்தின் கீழ் வீடு கட்டித் தரப்படும்.

2.திருநெல்வேலி மாவட்டத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டு தயார் நிலையிலுள்ள அம்பாசமுத்திரம் வட்டம், பாப்பாங்குளம் கிராமத்தில் 240 அடுக்கு மாடிவீடுகள் மற்றும் திருநெல்வேலி மாநகரம், ரெட்டியார்பட்டி பகுதியில் பணி முடிவடையும் நிலையிலுள்ள அடுக்குமாடி வீடுகள் ஆகியவற்றை முன்னுரிமை அடிப்படையில் விருப்பமுள்ள, ஏற்கனவே வீடு இல்லாத மாஞ்சோலை தொழிலாளர்களுக்கு விலையின்றி ஒதுக்கீடு செய்யப்படும்.

3.தொழிலாளர்களில், 55 வயதிற்குட்பட்ட பட்டியல் இனத்தைச் சார்ந்த வாழ்வாதார வசதி தேவைப்படும் தொழிலாளர்களுக்கு அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தில் (AABCS) புதிய தொழில் தொடங்க 35% மானியம் மற்றும் 6% வட்டிச் சலுகையுடன் சுய தொழில் தொடங்க கடன் வழங்கப்படும்.

4.இதர பிரிவுகளைச் சார்ந்த தொழிலாளர்களுக்கு புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு திட்டத்தின் (NEEDS) கீழ் 25% மானியம் மற்றும் 3% வட்டி சலுகையுடன் அதிகபட்சமாக ரூ.75 இலட்சம் வரை சுயதொழில் தொடங்க கடன் வழங்கப்படும்.

5.தகுதியுள்ள தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (Tamil Nadu Skill Development Corporation) மற்றும் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார மையம் (Tamil Nadu State Rural Livelihood Mission) மூலம் திறன் பயிற்சி வழங்கப்படும்.

6.திறன் பயிற்சி முடிப்பவர்களுக்கு தனியார் துறையில் உரிய வேலைவாய்ப்புப் பெற்று வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

7.சிறிய பால் பண்ணைகள் அமைத்தல், கறவை மாடுகள், ஆடுகள் வாங்குதல் ஆகியவற்றிற்காக ஆவின் நிறுவனம் மற்றும் கூட்டுறவுத் துறை மூலம் வட்டியில்லாக் கடன் வழங்கப்படும்.

8.பெண்களுக்கு மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மூலம் ரூ.1.50 இலட்சம் வரை சிறு கடன்கள் வழங்கப்படும்.

9.பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் கல்வி பாதிக்காத வகையில் அவர்கள் விரும்பும் அரசுப் பள்ளியில் அவர்களைச் சேர்க்கவும், அரசு விடுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் சேர்க்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

10.தொழிலாளர்கள் குடியேற விரும்பும் முகவரிக்கு அவர்களது குடும்ப அட்டை, ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை ஆகியவை சிறப்பு முகாம்கள் மூலம் சிரமமின்றி மாற்றம் செய்து தரப்படும்.

11.தொழிலாளர்களுக்கு நிறுவனம் வழங்க வேண்டிய மீதமுள்ள 75% கருணைத் தொகை நீதிமன்ற உத்தரவுபடி வழங்கிடவும், அவர்களுக்கு விதிப்படி வழங்கப்பட வேண்டிய மாதாந்திர ஓய்வூதியம் உள்ளிட்ட அனைத்து சட்டப்பூர்வ பலன்களும் முறையாக வழங்கப்படுவதை உறுதி செய்திட தொழிலாளர் நலத்துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவுபடி, மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் மறுவாழ்வுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும், அவர்களுக்கான குடியிருப்பு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் மற்றும் வாழ்வாதாரத்திற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளுமென திருநெல்வேலி மாவட்ட பொறுப்பு அமைச்சர் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்கள்.

நாமக்கல்லில் புதிய பேருந்து வழித்தடங்கள்! வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

விடியல் பயணத் திட்டம் மூலம் பெண்கள் வாழ்வில் மறுமலர்ச்சி!

அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பெருமிதம்!

நாமக்கல், ஜூலை 30- நாமக்கல் மாவட்டம், அத்தனூர் பேரூராட்சி, ஆட்டையாம்பட்டி பிரிவில் ரூ.1.51 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேசன் இணைந்து நிறுவியுள்ள பெட்ரோல் மற்றும் டீசல் எரிபொருள் சில்லறை விற்பனை நிலையத்தை திறப்பு விழா, பணியின் போது உயிரிழந்த 25 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கும் விழா, புதிய 7 புறநகர் மற்றும் 3 புதிய நகர்புற பேருந்துகள் என மொத்தம் 10 புதிய பேருந்துகளை பல்வேறு வழித்தடங்களுக்கு புதிய பேருந்துகளை பல்வேறு வழித்தடங்கள் துவக்க விழா ஆகியவை நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமை தாங்கினார்.

வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ் குமார், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், நகரமைப்பு மண்டல திட்டக்குழு உறுப்பினருமான எஸ்.எம்.மதுரா செந்தில் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கலந்து கொண்டு அத்தனூர் பேரூராட்சி, ஆட்டையாம்பட்டி பிரிவில் ரூ.1.51 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேசன் இணைந்து நிறுவியுள்ள பெட்ரோல் மற்றும் டீசல் எரிபொருள் சில்லறை விற்பனை நிலையத்தை திறந்து வைத்து, பணியின் போது உயிரிழந்த 25 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி, புதிய 7 புறநகர் மற்றும் 3 புதிய நகர்புற பேருந்துகள் என மொத்தம் 10 புதிய பேருந்துகளை பல்வேறு வழித்தடங்களுக்கு கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இவ்விழாவில் போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேசும் போது, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

அவர்கள், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் போக்குவரத்து துறை மிகச்சிறப்பாக செயல்பட்டதை போன்று சீர்செய்திட போக்குவரத்து துறையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார். அந்த வகையில் பழைய பேருந்துகளுக்கு பதிலாக சுமார் 7,500 புதிய பேருந்துகள் வாங்கிட நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். அதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. தற்போது 1,000 பழைய பேருந்துகள் மாற்றப்பட்டு புதிய பேருந்துகள் இயக்கப்பட்டுள்ளது. மேலும், பழைய பேருந்துகளுக்கு பதிலாக 300 புதிய பேருந்துகள் இயக்கப்பட உள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தர்மபுரி மாவட்டத்தில் அரசு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு 11 புதிய அரசு பேருந்துகளையும், திருவள்ளூர் மாவட்டத்தில் 10 புதிய அரசு பேருந்துகளையும் தொடங்கி வைத்துள்ளார். தொடர்ந்து பழைய பேருந்துகளுக்கு பதிலாக புதிய பேருந்துகள் இயக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

மேலும், பணியின் போது உயிரிழந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்க உத்தரவிட்டு ஏற்கனவே 16 ஓட்டுநர்கள், 72 நடத்துனர்கள், 2 தொழில்நுட்ப பணியாளர்கள் என 90 நபர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டு, தற்போது 1 ஓட்டுநர், 24 நடத்துனர் என மொத்தம் 25 வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. இதில் 7 நடத்துனர்கள் மகளிர் என்பது பெருமைக்குரியதாகும். மேலும், நீண்ட காலமாக வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கபடாமல் இருந்த நிலையில் இன்றைய தினம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டு வருகிறது. கும்பகோணத்தில் 32 வாரிசுதாரர்களுக்கும் ஆணை வழங்கப்பட்டுள்ளது. சென்னையில் 6 பெண் நடத்துனர்கள் பணியாற்றி வருகின்றனர்.

மேலும், நாமக்கல் முதல் சென்னை 2 பேருந்துகள், நாமக்கல் சேலம் மதுரை வழியாக 1 பேருந்து, நாமக்கல் கோயமுத்தூர் வழியாக 1 பேருந்து, இராசிபுரம் - சேலம் - பெங்களூர் வழியாக - 2 பேருந்துகள், திருச்செங்கோடு - சேலம் சென்னை வழியாக 1 பேருந்து என 7 புதிய புறநகர் பேருந்துகளும், நாமக்கல் - காரவள்ளி வழியாக 1 பேருந்து, நாமக்கல் மோகனூர் வழியாக 1 பேருந்து, மற்றும் திருச்செங்கோடு குமார பாளையம் வழியாக 1 பேருந்து என 3 புதிய நகரப் பேருந்துகள் மொத்தம் 10 புதிய பேருந்துகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து துறை இலாப நோக்கம் அற்ற சேவைத் துறை ஆகும். அந்த வகையில் மகளிருக்கு இலவச பேருந்து விடியல் பயணத்தை அறிவித்தார். அதற்கான தொகையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே ஒதுக்கீடு செய்து வருகின்றார். போக்குவரத்து துறைக்கு ஆட்சி பொறுப்பேற்ற பிறகு ரூ.1,500/-கோடியும், தற்போது ரூ.2,500/- கோடி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். இதன் மூலம் மகளிருக்கான இலவச பேருந்து விடியல்பயணம்வெற்றிகரமாக செயல்படுத்தி வருகின்றார்கள். இச்சேவையின் மூலம் பணிக்கு செல்லும் மகளிர், சிறு வியாபாரம் செய்பவர்கள் பயன்பெற்று வருகின்றனர். சேலம் போக்குவரத்து கழகம் சார்பில் 814 சாதாரண கட்டண நகர பேருந்துகளில் 10,33,985 மொத்த பயணங்களில், மகளிருக்கான கட்டணமில்லா விடியல் பயண சேவை மூலம் சுமார் 7,18,535 மகளிர் கட்டணமில்லா பயணம் மேற்கொண்டுள்ளார்கள். இது சுமார் 69 சதவிகிதம் ஆகும். மேலும் 28 மலைப் பேருந்துகளில் 17,793 மொத்த பயணங்களில் சுமார் 7,562 மகளிர் கட்டணமில்லா பயணம் மேற்கொண்டுள்ளார்கள். தற்போது 18 சதவிகிதம் மகளிர் இலவச பேருந்து பயணத்தை பயன்படுத்தி பெண்களின் வாழ்வில் மறுமலர்ச்சி பெற்றுள்ளார்கள்.

மகளிருக்கு இலவச பேருந்து விடியல் பயணத் திட்டத்தில் தமிழ்நாட்டில் சுமார் 510.55 கோடி பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சேலம் போக்குவரத்து கழகம் சார்பில் 60.34 கோடி பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மலைப்பகுதிகளில் தமிழ்நாட்டில் 75.44 இலட்சம் பயணங்களும், சேலம் போக்குவரத்து கழகம் சார்பில் 7 இலட்சம் மகளிர் பயணங்கள் மேற்கொண்டுள்ளார்கள். இதன்மூலம் போக்குவரத்து துறைக்கு ரூ.2,500/ கோடி நிதி ஒதுக்கீடு கிடைக்க பெற்றுள்ளது. இத்திட்டத்தை கர்நாடாக, தெலுங்கானா, ஆந்திரா உள்ளிட்ட மாநிலங்களும் செல்படுத்தி வருகின்றன.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும் சுமார் 20,000 அரசுப் பேருந்துகள் இயக்கப்பட்டு, சுமார் 1.25 இலட்சம் பணியாளர்கள் பணியாற்றி வருகின்றார்கள். ஒரிசாவில் 450 பேருந்துகள் இயக்கப்பட்டு தனியார் பணியாளர்கள் மூலம் இயக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் மட்டும் தான் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் அகவிலைப்படி, சம்பளம் உள்ளிட்டவை வழங்கப்பட்டு போக்குவரத்து துறை சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மேலும், பொங்கல், தீபாவளி, சிறப்பு கோவில் திருவிழாக்கள் மற்றும் தொடர் அரசு விடுமுறை நாட்களில் சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகிறது. எனவே, அரசின் திட்டங்கள் மற்றும் சேவைகளை பொதுமக்கள் பயன்படுத்தி கொண்டு தங்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்தி கொள்ள வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலைமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார். மேலும், பொதுமக்களின் போக்குவரத்தை எளிதாக்கும் வகையில் பல்வேறு புதிய பேருந்துகளை வழங்கி, பல்வேறு கிராமங்களுக்கு புதிய பேருந்து வழிதடத்தை தோற்றுவித்து புதிய பேருந்துகளை இயக்கி உள்ளார்கள். நாமக்கல் மாவட்டத்திற்கு மட்டும் தற்போது வரை பழைய பேருந்துகளுக்கு பதிலாக 25 புதிய பேருந்துகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 24 மணி நேரத்தில் மலை பகுதியில் பேருந்து சேவை வழங்கப்பட்டு செம்மாண்டம்பட்டி, பெரப்பன்சோலை பகுதி பொதுமக்கள், மாணவ, மாணவியர்கள் பயன் பெற்று வருகின்றார்கள். மேலும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சட்டசபையில் போக்குவரத்து துறை பணியாளர்களின் தேவைகளை எடுத்து ரைத்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள். இன்றைய தினம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தில் பணியின் போது இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட உள்ளது என அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இராசிபுரம் ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர் கே.பி.ஜெகநாதன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர் ஏ.ஆர்.துரைசாமி, ஊராட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் ஆர்.எம். துரைசாமி, அத்தனூர் பேரூராட்சி தலைவர் ஆர். சின்னுசாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.இராமசுவாமி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) நிர்வாக இயக்குநர் ஆர். பொன்முடி, பொது மேலாளர்பி.கோபாலகிருஷ்ணன் உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மயிலாடுதுறை மாவட்டக் கழக அலுவலகத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., பேசினார். உடன் சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஏசி.என்.சிவபாலன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என்.ரவி, முத்து.மகேந்திரன், மாவட்டக் கழக நிர்வாகிகள்கே.ஜி.சீனிவாசன், மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி மற்றும் பலர் உள்ளனர்.

கோவை – திருச்சி சாலையில் உள்ள ஒண்டிப்புதூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற பள்ளி மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதி வண்டிகள் வழங்கும் நிகழ்ச்சியில் வீட்டுவசதித்துறை, நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி கலந்து கொண்டு மாணாக்கர்களுக்கு விலையில்லா மிதிவண்டிகளை வழங்கினார். இந்நிகழ்வில்,கோவை மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் பாடி, மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன்,மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக், வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி,தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன், மாநகராட்சி துணை மேயர் இரா. வெற்றிச்செல்வன், பொதுக்குழு உறுப்பினர் ஆடிட்டர் சசிகுமார் சிங்காநல்லூர் பகுதி 1 செயலாளர் எஸ்.எம்.சாமி, மாநகராட்சி கிழக்கு மண்டலத்தலைவர் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக், பகுதி துணைச் செயலாளர் கஸ்தூரி அருண்,மாமன்ற உறுப்பினர்கள் சாந்தா மணி பன்னீர்செல்வம், சுமித்ரா தீபக்,வட்டக் கழகச் செயலாளர்கள் சுரேஷ் குமார்,lpf சண்முகம், ராஜேந்திரன், தி.இளங்கோவன், நெசவாளர் அணி விஸ்வநாதன்,கழக நிர்வாகிகள்,பள்ளி மாணவ, மாணவிகள் ஆசிரியர், ஆசிரியைகள் கலந்து கொண்டனர்.

சேலம் மத்திய மாவட்டத்தில் உள்ள தொகுதிகளில்

வாக்காளர் பட்டியலில் இறந்தவர்களின் பெயர்களை நீக்குக!

மாவட்ட தேர்தல் அலுவலருக்கு இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. வலியுறுத்தல்!

சேலம், ஜூலை 30- சேலம் மாவட்ட ஆட்சியர் - மாவட்டத் தேர்தல் அலுவலருக்கு சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. வலியுறுத்தியுள்ளதாவது:-

19.04.2024 அன்று நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் BLA2 வாக்கு சாவடி முகவர்கள் வீடு வீடாக களஆய்வு செய்யும் பொழுது இறந்த வாக்காளர்களின் பெயர்கள் ஒரு சட்டமன்ற தொகுதிக்கு 3000 க்கும் மேற்பட்டவை வாக்காளர் பட்டியலில் உள்ளது.

89சேலம் வடக்கு தொகுதியில் 4810, 90சேலம் தெற்கு தொகுதியில் 3217, 88 சேலம் மேற்கு தொகுதியில் 3046, 84 ஓமலூர் தொகுதியில் 1912 இறந்த வாக்காளர்களின் பெயர்கள் 27.03.2024 அன்று வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

84 ஓமலூர், 88 சேலம் மேற்கு,89சேலம் வடக்கு, 90 சேலம் தெற்கு ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் BLO மூலமாக வாக்காளர்களுக்கு வீடுவீடாக பூத் சிலிப் வழங்கும்போது ASD Absent Shift Death பட்டியல் தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது. ASD பட்டியலில் உள்ள இறந்த வாக்காளர்களை அக்டோபர் மாதம் வரக்கூடிய வரைவு வாக்காளர் பட்டியலில் நீக்கம் செய்து சரி செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

'நீட்' விலக்கு குறித்து – பேரவையில்

கவன ஈர்ப்புத் தீர்மானம்!

ஏ.எம்.எச்.நாஜிம் கடிதம்!

புதுச்சேரி, ஜூலை 30- சட்டமன்றத்தில் நீட் விலக்கு தொடர்பான கவனஈர்ப்புத்தீர்மானத்தை கொண்டுவர அனுமதி

வழங்க வேண்டும் என்று புதுச்சேரி பேரவைத் தலைவருக்கு தி.மு.க. ஏ.எம்.எச்.நாஜிம் எம்.எல்.ஏ. கடிதம் எழுதியுள்ளார்.

மருத்துவக் கல்லூரியில் மாணவர்கள் சேருவதற்கு தடையாக 'நீட்' நுழைவுத் தேர்வு உள்ளதால் அது குறித்து புதுச்சேரி சட்டப் பேரவையில் விவாதிக்க வேண்டும்என்றுபலமுறை முயற்சித்தும் முடியாத காரணத்தால், நாளை தொடங்க இருக்கும் சட்டமன்றக் கூட்டத் தொடரில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வர வேண்டும்என்றுபேரவைத் தலைவருக்கு கழக உறுப்பினர் ஏ.எம்.எச். நாஜிம் நேற்று கடிதம் எழுதியுள்ளார்.

நாகை மாவட்டம் கீழ்வேளூர் சட்ட மன்றத் தொகுதி திருக்குவளை கடைத் தெருவில் மாவட்ட இளைஞர் அணி சார்பில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூலகத்தை நாகை மாவட்டக்கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் திறந்து வைத்தார். உடன் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் என்.இளையராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராசன் இல.மேகநாதன், க.ராஜேந்திரன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் ஆ.தாமஸ்ஆல்வாஎடிசன், சோ. பா.மலர்வண்ணன், கே.பழனியப்பன், வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரியசார்லஸ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி.,என்.கார்த்தி , துணை அமைப்பாளர்கள் எஸ்.டேனியல்சத்தியா, கே.சுரேஷ், பன்னீர்செல்வம், டி.கலையரசன் மற்றும் பலர் உள்ளனர்.